விரைவு நீதிமன்றம் (ந.வ), உத்தமபாளையம்

முன்னிலை: திரு.S.அமலநாத கமலக்கண்ணன், **B.A.,B.L.,Hon's.,**
நீதித்துறை நடுவர், விரைவு நீதிமன்றம்,
உத்தமபாளையம்.

2026–ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 31–ஆம் நாள் திங்கள்கிழமை

சுருக்குமுறை ஆவண வழக்கு எண். 300/2025

CNR.No.TNTH080007042025

புகார்தாரர்	திரு.அ.வளையாபதி (வயது 61/2026), த/பெ.அம்பலம், வார்டு–11, மாரியம்மன் கோவில் தெரு, அனுமந்தன்பட்டி, உத்தமபாளையம் தாலுகா, தேனி மாவட்டம்.
எதிரி	திருமதி.க.சுகுணா (வயது 56/2026) க/பெ.கனகராஜ், 20, சீனியம்மாள் காம்பவுண்டு, தெற்கு வீதி (முதல் தெரு), எஸ்.கொடிக்களம், மதுரை மாவட்டம்.
குற்றம் முறையிட்டது	மாற்று முறை ஆவணச் சட்டம் பிரிவுகள் 138, 142–ன் கீழ்
காசோலை எண். (000164)	08.07.2025
காசோலை தொகைகள்	Rs.1,00,000/–
வசூலுக்கு தாக்கல் செய்த நாள்	24.07.2025
காசோலை திரும்பிய நாள்	29.07.2025
காசோலை திரும்பிய காரணம்	Funds Insufficient
அறிவிப்பு அனுப்பிய நாள்	01.08.2025
அறிவிப்பு பெறப்பட்ட நாள்	02.08.2025
வழக்கு தாக்கல் நாள்	10.09.2025
தீர்ப்பு நாள்	31.08.2026
புகார்தாரர் தரப்பு வழக்கறிஞர்	திரு.M.S.முத்துக்குமரன்.
எதிரி தரப்பு வழக்கறிஞர்	திரு.P.சுரேஷ்குமார்.

AMALANATHA KAMALAKANNAN S
Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.08.31 18:30:42 +0530

தீர்வு	எதிரி ஆஜர். **எதிரி மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவு 138–ன் கீழ் குற்றவாளி இல்லை என முடிவு செய்து B.N.S.S பிரிவு 278(1)–ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.**

இருதரப்பு வாதம் கேட்கப்பட்டும், வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டும் இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்,

<u>தீர்ப்புரை</u>

1. <u>புகார்தாரர் வழக்கு சுருக்கம்:</u>

புகார்தாரருக்கும், எதிரிக்கும் இருந்து வந்த பழக்கவழக்கத்தின் அடிப்படையில் எதிரி தனது குடும்ப செலவிற்காகவும், இதர சில்லரை கடன்களை தீர்க்கவும் வேண்டி புகார்தாரரிடம் கைமாற்று கடனாக பணம் கேட்டுள்ளார். புகார்தாரர் கடந்த 08.06.2025ம் தேதியன்று தனது வீட்டில் வைத்து ரூ.1,00,000/–ஐ எதிரிக்கு ரொக்கமாக கொடுத்துள்ளார். அதற்கு ஆதரவாக 08.07.2025 நாளிட்ட 000164 என்ற எண் கொண்ட கரூர் வைஸ்யா வங்கி, உத்தங்குடி கிளைக்குரிய ரூ.1,00,000/–த்திற்கான காசோலையை கொடுத்துள்ளார். அந்த காசோலையை பணமாக்கும் பொருட்டு புகார்தாரர் தான் கணக்கு வைத்துள்ள இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, உத்தமபாளையம் கிளையில் 24.07.2025ம் தேதியன்று வசூலுக்கு தாக்கல் செய்துள்ளார். மேற்படி காசோலையானது "Funds Insufficient" என்ற காரணத்தினால் மதிப்பு மறுக்கப்பட்டு 29.07.2025 அன்று திரும்பியது. காசோலை தொகையை கேட்டு எதிரிக்கு 01.08.2025 நாளிட்டு அனுப்பிய சட்ட அறிவிப்பை 02.08.2025ம் தேதி எதிரி பெற்று கொண்டு, 16.08.2025ம் தேதியன்று பதில் அறிவிப்பு அனுப்பி, பணம் செலுத்தாமல் இருந்துள்ளார். மேலும் எதிரி காசோலையின் தொகையை செலுத்தாமல் புகார்தாரரை மோசடி செய்து ஏமாற்றும் நோக்கத்துடன் செயல்பட்டதால் எதிரி மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவுகள் 138 மற்றும்

AMALANATHA KAMALAKANNAN S
Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.08.31 18:30:48 +0530

142ன் கீழ் குற்றம் இழைத்துள்ளார் என்பதால் எதிரியை தண்டிக்க வேண்டி இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளார்.

2. புகார்தாரர் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலம், புகார்மனு ஆவணங்களை பரிசீலனை செய்து பார்த்ததில் எதிரிக்கு எதிராக வழக்கு விசாரணைக்கு உத்தரவிட முதல் தோற்ற ஆதாரம் இருந்ததால் எதிரிக்கு பிரிவு 227 B.N.S.S–ன் கீழ் அழைப்பாணையுடன் இணைத்து புகார் நகல் அனுப்பப்பட்டது.

3. எதிரி அழைப்பாணையையும், புகார் நகலையும் பெற்றுக்கொண்டு நீதிமன்றத்தில் ஆஜரானதும் எதிரியிடம் B.N.S.S பிரிவு 274–ன் படி குற்றத்தின் சாரம்சம் குறித்து கேள்வி கேட்கப்பட்டது பொய்வழக்கு என்றும், எதிரி குற்றத்தை மறுத்து விசாரணை செய்ய வேண்டும் என்று கூறியுள்ளார்.

4. <u>புகார்தாரர் தரப்பு சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள்:</u>

4.1. புகார்தாரர் திரு.வளையாபதி தனது புகாரில் கூறியுள்ள சங்கதிகளை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்து அது ம.சா.1 முதல் விசாரணை சாட்சியமாக பதிவு செய்யப்பட்டுள்ளது. எதிரி கொடுத்த 08.07.2025ம் தேதியிட்ட 000164 என்ற எண் கொண்ட கரூர் வைஸ்யா வங்கி, உத்தங்குடி கிளைக்குரிய ரூ.1,00,000/–க்கான அசல் காசோலை ம.சா.ஆ.1 ஆகவும், மேற்படி காசோலை "Funds Insufficient" என்ற காரணத்தினால் மதிப்பு மறுக்கப்பட்டு 29.07.2025ம் தேதியன்று திரும்பியதற்கான வங்கி குறிப்புரை அசல் ம.சா.ஆ.2 ஆகவும், மேற்படி காசோலைக்குரிய தொகையை கேட்டு எதிரிக்கு அனுப்பிய 01.08.2025 நாளிட்ட சட்ட அறிவிப்பு அலுவலக நகல் ம.சா.ஆ.3 ஆகவும், 02.08.2025ம் தேதியிட்டு புகார்தாரர் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பை எதிரி பெற்று கொண்டதற்கான அஞ்சலக இணையதள பதிவிறக்க நகல் ம.சா.ஆ.4 ஆகவும், 16.08.2025 நாளிட்டு எதிரி அனுப்பிய பதில் அறிவிப்பு ம.சா.ஆ.5 ஆகவும் ம.சா.1 குறியீடு செய்துள்ளார்.

AMALANATHA KAMALAKANNAN S

Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.08.31 18:30:55 +0530

5. <u>பிரிவு 351(1)(b) வினா மற்றும் பதில்:</u>

புகார்தாரர் தரப்பில் விசாரிக்க கூடுதல் சாட்சியம் இல்லை என மேற்குறிப்பு செய்ததால் புகார்தாரர் தரப்பு சாட்சியத்தில் எதிரிக்கு பாதகமாக உள்ள அம்சங்களை தொகுத்து BNSS பிரிவு 351(1)(ஆ)–ன் கீழ் வினவிய போது புகார்தாரர் தரப்பு சாட்சியத்தை பொய் வழக்கு என்றும், பணத்தை திருப்பி கொடுத்துவிட்டேன் என்றும், ம.சா.ஆ.1.ஆன காசோலை மற்றும் அதிலுள்ள கையொப்பம் தன்னுடையதுதான் என்றும், தனது தரப்பில் விசாரிக்க சாட்சி உள்ளது என்றும் கூறினார்.

6. <u>எதிரி தரப்பு சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள்:</u>

6.1. எ.சா.1 திரு.செந்தில்குமார் தனது சாட்சியத்தில், புகார்தாரர் மற்றும் எதிரியை எனக்கு தெரியும். 2023ம் வருடத்தில் ஒரு நாள் வளையாபதியிடம் சுகுணா ரூ.1 லட்சம் பணம் வாங்கினார். அதற்கு பொறுப்பிற்காக சுகுணாவின் காசோலையை கொடுத்தார். சுகுணா என் மூலம் வளையாபதிக்கு பணம் செலுத்துவார். எனது Gpay மூலம் வளையாபதி கணக்கிற்கு மாதம் மாதம் ரூ.5 ஆயிரம் என 12 மாதத்திற்கு ரூ.60 ஆயிரம் அனுப்பியுள்ளேன். மீதி பணம் ரூ.40 ஆயிரத்தை மதுரை சுந்தரம் பார்க் அருகே வைத்து சுகுணா, வளையாபதியிடம் கொடுத்துவிட்டார். பணத்தை கொடுத்துவிட்டு, காசோலையை கேட்டபோது ஊருக்கு சென்று தருவதாக வளையாபதி கூறினார். அவர்களுக்குள் இருந்து வரவு–செலவு முடிந்துவிட்டது. இந்த வழக்கு சம்பந்தமாக தற்போது தான் எனக்கு தெரியவந்தது.

6.2. எ.சா.2 SBI ACB வங்கி, மதுரை கிளை மேலாளர், திருமதி.காயத்ரி தனது சாட்சியத்தில், செந்தில்குமார் எங்கள் வங்கியில் சேமிப்பு கணக்கு வைத்துள்ளார். அவரது சேமிப்பு கணக்கு எண்.20058106444 ஆகும். 01.12.2022 30.12.2023 ஆகிய தேதிக்குரிய செந்தில்குமாரின் கணக்கு பட்டியலை எ.சா.ஆ.2 ஆக தாக்கல் செய்துள்ளார்.

AMALANATHA KAMALAKANNAN S
Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.08.31 18:31:02 +0530

6.3. எ.சா.3 திருமதி.சுகுணா தனது சாட்சியத்தில், செந்தில்குமார் மூலம் எனக்கு புகார்தாரரை தெரியும். 2023 ல் செந்தில்குமார் மூலம் புகார்தாரரிடம் ரூ.1,00,000/– பணம் வாங்கினேன். அதற்கு ஆதரவாக ஒரு காசோலையை ரூ.1 லட்சம் நிரப்பி கொடுத்தேன். செந்தில்குமார் மூலம் அவரது G – Pay யிலிருந்து புகார்தாரருக்கு மாதம் ரூ.5,000/– அனுப்பினேன். ரூ.60,000/– வரை பணம் அனுப்பியுள்ளேன். ரூ.40,000/– மீதி பணத்தை மதுரை, சுந்தரம் பார்க்கில் வைத்து செந்தில்குமார் மூலம் புகார்தாரரிடம் கொடுத்துவிட்டேன். நான் பணத்தை கொடுத்த பின்பு காசோலையை புகார்தாரர் திருப்பி தரவில்லை.

6.4. 16.07.2025 ல் புதுார் காவல் நிலையத்தில் புகார்தாரரின் மீது புகார் கொடுத்தேன். விசாரணைக்காக புகார்தாரரை அழைத்தார்கள். அதற்கு புகார்தாரர் காவல் நிலையத்திற்கு வரவில்லை. காவல் நிலையத்திலிருந்து புகார்தாரருக்கு அழைப்பாணை அனுப்பினார்கள். 28.07.2025 ல் புகார்தாரர் காவல் நிலையத்திற்கு வந்தார். அப்போது எனது காசோலையை வசூலுக்கு தாக்கல் செய்துவிட்டார். மேற்படி விபரத்தை நான் காவல் நிலையத்தில் கூறினேன். அதற்கு நீதிமன்றத்தில் பார்த்து கொள்வதாகவும், தகாத வார்த்தையால் பேச மாட்டேன் என்று புகார்தாரர் காவல்நிலையத்தில் எழுதி கொடுத்துள்ளார். புதுார் காவல் நிலையத்தில் புகார்தாரர் மீது கொடுத்த புகார்மனுவினை எ.சா.ஆ.3 ஆகவும், மேற்படி புகார்மனு இரசீது எண்.584/2025 ஐ எ.சா.ஆ.4 ஆகவும் தாக்கல் செய்துள்ளார்.

7. <u>புகார்தாரர் தரப்பு வாதம்:</u>

7.1. கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில், புகார்தாரர் அவரது சாட்சியத்தின் மூலமும், ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.5 வரையிலான ஆவணங்கள் மூலமும், எதிரி மீதான குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டுள்ளது. ம.சா.ஆ.1 ஆன காசோலையும், அதிலுள்ள கையொப்பமும் தன்னுடையதுதான் என்று எதிரி ஒப்புக்கொண்டுள்ளதால், மாற்றுமுறை ஆவணச் சட்டத்தின் அனுமானங்கள் புகார்தாருக்கு ஆதரவாக உள்ளது. எதிரி பொய்யான விபரங்களை கூறி பதில்

AMALANATHA KAMALAKANNAN S
Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.08.31 18:31:09 +0530

அறிவிப்பு அனுப்பியுள்ளார். எ.சா.1 ஆன செந்தில்குமாருக்கும், புகார்தாரருக்கும் இடையே இருந்த வரவு செலவு சம்பந்தமாக செந்தில்குமார் செலுத்தியிருந்த தொகையின் விபரத்தை வைத்து எதிரி பொய்யான எதிர்வாதம் செய்கிறார். காசோலையில் உள்ள தொகையை எதிரிதான் பூர்த்தி செய்து புகார்தாரருக்கு கொடுத்துள்ளார். எதிரி காவல் நிலையத்தில் கொடுத்ததாக சொல்லப்படும் மனுவில் உள்ள விபரங்களுடன் முரண்பட்டு சாட்சியம் அளித்துள்ளார். புகார்தாரர் தரப்பில் தாக்கல் செய்த அனைத்து ஆவணங்களையும் எதிரி தரப்பில் குறிப்பிட்டு மறுக்கவில்லை. எனவே எதிரி மீதான குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டுள்ளது என்ற வாதத்தினை முன்வைத்தார்.

8. <u>எதிரி தரப்பு வாதம்:</u>

கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில், எதிரி புகார்தாரரிடம் ரூ.1,00,000/- கைமாற்றுகடன் வாங்கவில்லை. எதிரி கடந்த 2023 ல் செந்தில்குமார் என்பவர் மூலம் பெற்ற ரூ.1,00,000/- கடனுக்கு பொறுப்பிற்காக கொடுத்த எதிரியின் காசோலையை வைத்து புகார்தாரர் பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளார். புகார்தாரரிடம் வாங்கிய தொகை முழுவதையும் எதிரி செலுத்தியுள்ளார் என்பதை உரிய சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது. செந்தில்குமார் மூலம் எதிரி பணத்தை திருப்பி செலுத்திவிட்டார் என்பதை நிரூபிக்கும் வகையில் செந்தில்குமார், வங்கி மேலாளரின் சாட்சியம் மற்றும் எ.சா.ஆ.2 ஆன கணக்கு பட்டியல் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது. காசோலையில் தேதியை குறிப்பிடாமல் எதிரி கொடுத்திருந்தார். எதிரி புகார்தாரர் மீது மதுரை, புதூர் காவல்நிலையத்தில் புகார் கொடுத்ததை மனதில் வைத்துக்கொண்டு புகார்தாரர் காசோலையை வசூலுக்கு தாக்கல் செய்துள்ளார். எ.சா.ஆ.3 ஆன மனுவில் குறிப்பிட்டுள்ள எதிரியின் நிறுவனமும், மதுரை சுந்தரம் பார்க் என்பதும் ஒரே இடத்தில்தான் உள்ளது. எதிரி வாங்கிய தொகையை திருப்பி செலுத்திவிட்டதால், எதிரி காசோலை தொகையை செலுத்த கடமைப்பட்டவர் இல்லை. ஆகையால், புகார்தாரருக்கு

AMALANATHA KAMALAKANNAN S
Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.08.31 18:31:16 +0530

ஆதரவாக இருப்பதாக கூறப்படும் அனுமானங்கள் மறுக்கப்பட்டுள்ளது என்பதால் எதிரிக்கு எதிராக பிரிவு 138 மாற்றுமுறை ஆவணச்சட்டத்தின் கீழ் தண்டிக்க இயலாது என்ற வாதத்தை முன்வைத்தார்.

9. சான்றாவணங்கள் மற்றும் இதர வழக்கு ஆவணங்கள் கவனமாக பரிசீலிக்கப்பட்டு கருத்தில் எடுத்து கொள்ளப்பட்டது.

10. இவ்வழக்கில் எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றமான மாற்றுமுறை ஆவண சட்ட பிரிவு 138–ன் படி சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா ? என்பது தீர்விற்குரிய பிரச்சனையாகும்.

10.1. எதிரி மீதான குற்றத்தை நிரூபிக்க பிரிவு 138 மாற்றுமுறை ஆவணச் சட்டத்தின் உட்கூறுகள் நிரூபிக்கப்பட்டிருக்க வேண்டும்.

- முதலில் எதிரி, புகார்தாரருக்கு 08.07.2025–ம் தேதியிட்டு ரூ.1,00,000 க்கு கொடுத்த கரூர் வைஸ்யா வங்கி, உத்தங்குடி கிளைக்குரிய ம.சா.ஆ.1 காசோலையானது உரிய காலத்திற்குள் வங்கியில் வசூலுக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

- மேற்படி காசோலையானது கடந்த 29.07.2025ம் தேதியன்று Funds Insufficient என்ற காரணத்தினால் மதிப்பு மறுக்கப்பட்டு இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, உத்தமபாளையம் கிளையிலிருந்து திருப்பப்பட்டது என்பது ம.சா.ஆ.2 ஆவணத்தின் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது.

- காசோலை திரும்பியது குறித்து 01.08.2025–ம் தேதியன்று புகார்தாரர் உரிய காலத்திற்குள் எதிரிக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியுள்ளது ம.சா.ஆ.3 ஆவணத்தின் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது.

- 02.08.2025 நாளிட்டு மேற்படி அறிவிப்பை எதிரி பெற்று கொள்ளாமல் திருப்பி அனுப்பப்பட்ட அஞ்சலக இணையதள பதிவிறக்க நகல் ம.சா.ஆ.4 ஆவணத்தின் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது.

AMALANATHA KAMALAKANNAN S
Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.08.31 18:31:23 +0530

- 16.08.2025 ம் நாளிட்டு எதிரி அனுப்பிய பதில் அறிவிப்பு ம.சா.ஆ.5 ஆவணத்தின் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது.

அதன்பின்னர் எதிரி 15 நாட்களுக்குள் பணம் செலுத்தாமல் இருந்ததால் உரிய காலத்திற்குள் புகார்தாரர் இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளார்.

10.2. தற்போது தாவா காசோலையானது எதிரியின் காசோலைதானா? என்றும், எதிரி தன்னுடைய சட்டப்படியான கடனை தீர்க்க தான் புகார்தாரருக்கு தாவா காசோலையை கொடுத்தாரா? என்பதை பரிசீலனை செய்கையில், தாவா காசோலை மற்றும் அதிலுள்ள கையொப்பம் தன்னுடையதுதான் என்று எதிரி ஒப்புக்கொண்டுள்ளார். எனவே மாற்றுமுறை ஆவணச் சட்டப்பிரிவு 118 (a)–ன்படி வழக்கு காசோலை மறுபயனுக்காகத்தான் கொடுக்கப்பட்டுள்ளது என்று புகார்தாரருக்கு ஆதரவாக அனுமானம் நிலவுகிறது. மேலும், K.Bhaskaran Vs. Sankaran Vaidhyan Balan (1999 (4) RCR (Criminal) 309) என்ற மாண்புமிகு உச்சநீதிமன்ற தீர்ப்பின்படி, எதிரி காசோலையில் உள்ள கையொப்பத்தை மறுக்கப்படவில்லை என்பதால் மாற்றுமுறை ஆவண சட்ட பிரிவு 139–ன் படி காசோலையானது சட்டப்படியான கடனை தீர்ப்பதற்காக கொடுக்கப்பட்டதுதான் என்று புகார்தாரருக்கு ஆதரவாக அனுமானம் நிலவுகிறது.

10.3. மேற்கண்ட அனுமானங்கள் புகார்தாரருக்கு ஆதரவாக இருக்கும் பட்சத்தில் எதிரி தரப்பில் மறுக்ககூடிய அனுமானங்கள் ஆகும். Basalingappa Vs mudibasappa என்ற மாண்புமிகு உயர்நீதிமன்ற தீர்ப்பின்படி எதிரி தனது தரப்பு சாட்சியங்களை முன் நிறுத்துவதன் மூலமாகவோ அல்லது புகார்தாரர் சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்தோ Pre–Ponderance of probability என்ற அடிப்படையில் தனது தரப்பிற்கு ஆதரவாக எதிர்வாதத்திற்குரிய சந்தேகத்தை ஏற்படுத்துவதன் மூலம் மறுக்கலாம்.

10.4. மேற்படி அனுமானங்கள் புகார்தாரருக்கு ஆதரவாக இருக்கும் நிலையில், எதிரி தரப்பில் இருந்து மறுக்கப்படும் விபரங்கள் யாதெனில்,

AMALANATHA KAMALAKANNAN S
Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.08.31 18:31:29 +0530

"கடந்த 08.06.2025ல் எதிரி புகார்தாரரிடம் ரூ.1,00,000/- கடன் வாங்கவில்லை என்றும், "கடந்த 2023ல் செந்தில்குமார் என்பவர் மூலம் எதிரி புகார்தாரரிடம் பெற்ற ரூ.1,00,000/- கடனுக்கு பொறுப்பிற்காக கொடுத்த எதிரியின் காசோலையை வைத்து புகார்தாரர் பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளார்" என்று புகார்தாரரின் வழக்கினை மறுத்து எதிர்வாதம் செய்யப்பட்டுள்ளது.

10.5. புகார்தாரர் அவரது மனுவில், புகார்தாரருக்கும், எதிரிக்கும் இருந்து வந்த பழக்கவழக்கத்தின் அடிப்படையில் எதிரி தனது குடும்ப செலவிற்காகவும், இதர சில்லரை கடன்களை தீர்ப்பதற்காக கடன் பெற்றதாகவும், அதற்கு ஆதரவாக தாவா காசோலையை கொடுத்ததாகவும், அதனை வங்கியில் வசூலுக்கு தாக்கல் செய்தபோது பணம் வசூலாகாமல் Funds Insufficient என காரணம் குறிப்பிட்டு காசோலையானது திருப்பப்பட்டது என கூறியுள்ளார்.

10.6. புகார்தாரர் தானாக முன்வந்து தன்னை ம.சா.1 ஆக விசாரணை செய்துள்ளார். புகார்தாரர் அவரது மனுவில் உள்ள விபரங்களை ஒத்திசைத்தே நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளார். தாவா காசோலை வங்கியிலிருந்து மறுக்கப்பட்ட பின்னர் புகார்தாரர் எதிரிக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியுள்ளார். அதனை எதிரி பெற்று கொண்டு அவரது தரப்பினை முன்னிலைப்படுத்தி பதில் அறிவிப்பு அனுப்பியுள்ளார்.

10.7. மேற்படி பதில் அறிவிப்பில், செந்தில்குமார் என்பவர் மூலம் புகார்தாரர் அறிமுகம் ஆனார் என்றும், எதிரி நடத்திய சுடர் டிரேடர்ஸ் என்ற நிறுவனத்தின் தொழில் வளர்ச்சிக்காக புகார்தாரரிடம் ரூ1,00,000/- கடனாக செந்தில் என்பவர் முன்னிலையில் பெற்றார் என்றும், அந்த தொகையில் ரூ5,000/- வீதம் 11 மாதங்கள் ரூ55,000/- செந்திலிடம் கொடுத்து, அந்த தொகையை செந்தில் G Pay மூலம் புகார்தாரருக்கு முறையாக செலுத்தியுள்ளார் என்றும், மதுரையில் உள்ள சுந்தரம் பார்க்கில் வைத்து ரூ45,000/- ரொக்கமாக கொடுத்தார் என்றும், காசோலையை திருப்பி கேட்டபோது 14.07.2025ம்

AMALANATHA KAMALAKANNAN S
Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.08.31 18:31:36 +0530

தேதியன்று மேலும் ரூ1,00,000/– கொடுத்தால் மட்டுமே காசோலையை திருப்பி தருவதாக கூறி புகார்தாரர் மிரட்டியதால், 16.07.2025 ம் தேதியன்று எதிரி மதுரை கே.புதூர் காவல்நிலையத்தில் புகார்தாரர் மீது புகார் கொடுத்தார் என்றும், விசாரணைக்கு புகார்தாரர் ஒத்துழைக்காமல் 24.07.2025 ம் தேதியன்று காசோலையை வசூலுக்கு தாக்கல் செய்து, 27.07.2025 ம் தேதியன்று காவல்நிலையத்தில் ஆஜராகி நீதிமன்றத்தில் பார்த்துக்கொள்வதாக கூறினார் என்று குறிப்பிட்டுள்ளது.

10.8. எதிரி தானாக முன்வந்து தன்னை எ.சா.3 ஆக விசாரணை செய்துள்ளார். எதிரி அவரது சாட்சியத்தில், 2023 ல் புகார்தாரரிடம் ரூ.1,00,000/– பெற்ற பின்பு செந்தில்குமார் G Pay மூலம் புகார்தாரருக்கு மாதம் ரூ5,000/– வீதம் ரூ.60,000/– அனுப்பினேன் என்றும், சுந்தரம் பார்க்கில் வைத்து செந்தில்குமார் மூலம் புகார்தாரரிடம் ரூ40,000/– கொடுத்தேன் என்றும், காசோலையை கேட்டபோது கூடுதலாக ரூ1,00,000 கேட்டு மிரட்டியதால் 16.07.2025 ம் தேதியன்று மதுரை புதூர் காவல்நிலையத்தில் புகார்தாரர் மீது புகார் கொடுத்தேன் என்று சாட்சியம் அளித்தும், மேற்படி புகார் மனுவை எ.சா.ஆ.3 மற்றும் அதற்கான மனு ரசீதை எ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்துள்ளார்.

10.9. மேற்படி எ.சா.ஆ.3 மற்றும் எ.சா.ஆ 4 யை பரிசீலனை செய்கையில் எதிரி, புகார்தாரர் மீது 16.07.2025 ம் தேதியன்று மதுரை புதூர் காவல்நிலையத்தில் புகார் கொடுத்துள்ளார் என்று தெரியவருகிறது. மேலும் புகார்தாரரை எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்தபோது, 16.07.2025 ம் தேதியன்று எதிரி காவல் நிலையத்தில் புகார்மனு கொடுத்த விபரத்தை புகார்தாரர் ஒப்புக்கொண்டுள்ளார். மேலும் புகார்தாரர் காவல்நிலையத்தில் எழுதிக்கொடுத்த வாக்குமூலத்தை எ.சா.ஆ.1 ஆக எதிரி தரப்பில் புகார்தாரரின் குறுக்கு விசாரணையில் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

10.10. எதிரி 16.07.2025 ம் தேதியன்று காவல்நிலையத்தில் புகார்தாரர் மீது புகார் கொடுத்ததை மனதில் வைத்துக்கொண்டு காசோலையை புகார்தாரர்

AMALANATHA KAMALAKANNAN S
Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.08.31 18:31:43 +0530

வசூலுக்கு தாக்கல் செய்தார் என்ற வாதத்தை எதிரி தரப்பில் முன்வைக்கப்பட்டது. எதிரி காவல் நிலையத்தில் புகார் கொடுத்த விபரமானது காசோலையை வசூலுக்கு தாக்கல் செய்த நாளன்று தனக்கு தெரியாது என்று புகார்தாரர் குறிப்பிட்டு சாட்சியம் அளிக்கவில்லை. ஆகையால் எதிரி காவல்நிலையத்தில் புகார்கொடுத்த விபரமானது தெரிந்த பின்புதான் புகார்தாரர் காசோலையை வசூலுக்கு தாக்கல் செய்துள்ளார் என்று புலப்படுகிறது.

10.11. இந்நிலையில், எதிரி பெற்ற தொகையை புகார்தாரருக்கு செந்தில்குமார் மூலமும், நேரிலும் திருப்பி செலுத்தியுள்ளதாக எதிரி தரப்பில் கூறப்பட்டது. மேலும் செந்தில்குமார் என்பவரை எ.சா.1 ஆக எதிரி தரப்பில் விசாரணை செய்யப்பட்டுள்ளது. எ.சா.1 அவரது சாட்சியத்தில், 2023 ல் எதிரி புகார்தாரரிடம் ரூ.1,00,000/- வாங்கினார் என்றும், அதற்கு ஆதரவாக காசோலை கொடுத்தார் என்றும், தனது G Pay மூலம் ரூ5,000/- வீதம் 12 மாதத்திற்கு ரூ.60,000/- அனுப்பியுள்ளார் என்றும், மீதி ரூ.40,000/-யை மதுரை சுந்தரம் பார்க்கில் புகார்தாரரிடம் கொடுத்தாக சாட்சியம் அளித்துள்ளார்.

10.12. மேற்படி செந்தில்குமார் கணக்கு வைத்திருக்கும் வங்கியின் மேலாளரை எ.சா.2 ஆக எதிரி தரப்பில் விசாரணை செய்யப்பட்டது. எ.சா.2 அவரது சாட்சியத்தில், 03.01.2023 முதல் 03.11.2023 வரை மொத்தம் ரூ.55,000/- தனித்தனி UPI ID மூலம் பரிவர்த்தனை செய்யப்பட்டதாக சாட்சியம் அளித்து, எ.சா.ஆ.2 ஆன கணக்கு பட்டியலை தாக்கல் செய்துள்ளார்.

10.13. மேற்படி ஆவணத்தை பார்க்கையில், புகார்தாரரின் பெயர் அதில் குறிப்பிடவில்லை என்றாலும், செந்தில்குமார் புகார்தாரருக்கு மாதம் மாதம் ரூ5,000/- செலுத்தியுள்ளார் என்பதை புகார்தாரர் ஒப்புக்கொண்டுள்ளார். ஆனால் மேற்படி தொகைகளானது செந்தில்குமார் புகார்தாரரிடம் வைத்திருந்த வரவு செலவிற்காக செலுத்தப்பட்டது என்று புகார்தாரர் சாட்சியம் அளித்துள்ளார். ஆனால் செந்தில்குமார் புகார்தாரரிடம் எவ்வளவு தொகை வாங்கினார் என்பதை குறித்து கேள்வி கேட்டபோது, ஞாபகம் இல்லை என்று புகார்தாரர் கூறியுள்ளார்.

AMALANATHA KAMALAKANNAN S
Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.08.31 18:31:50 +0530

மேலும் புகார்தாரரிடம் செந்தில்குமார் எந்த தேதியில், எவ்வளவு பணம் வாங்கினார் என்றும், அதற்காக என்ன ஆவணங்கள் கொடுத்தார் என்பது குறித்து புகார்தாரர் தரப்பில் எவ்வித விளக்கமும் அளிக்கவில்லை.

10.14. மேலும் புகார்தாரரிடம் செந்தில்குமார் வரவு செலவு வைத்திருந்தார் என்பதை நிரூபிக்கும் வகையில், புகார்தாரர் தரப்பில் எவ்வித ஆவணங்களும் தாக்கல் செய்யவில்லை. ஆகையால் புகார்தாரருடன் செந்தில்குமார் வைத்திருந்த வரவு செலவிற்காகத்தான் அவர் பணம் அனுப்பினார் என்பதை புகார்தாரர் தரப்பில் நிரூபிக்கவில்லை என்று முடிவு செய்கிறது.

10.15. எதிரிக்கும், புகார்தாரருக்கும் இடையே வேறு வரவு செலவு இருந்ததாக புகார்தாரர் குறிப்பிட்டு சாட்சியம் அளிக்கவில்லை. இந்நிலையில், எதிரி மற்றும் செந்தில்குமாரின் சாட்சியத்தின்படி, 2023 ல் எதிரி வாங்கிய தொகைக்கு ஆதரவாகத்தான் 2023 ல் புகார்தாரருக்கு செந்தில்குமார் மூலம் எதிரி பணம் செலுத்தியுள்ளார் என்று சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் ஊர்ஜிதம் செய்யப்படுகிறது. ஆகையால் 08.06.2025 ம் தேதியன்று புகார்தாரரிடம் எதிரி ரூ.1,00,000 கைமாற்று கடன் வாங்கினாரா என்று சந்தேகம் எழுகின்றது.

10.16.மேலும் எதிரி காவல்நிலையத்தில் கொடுத்ததாக சொல்லப்படும் எ.சா.ஆ.3 ஆன புகார்மனுவில், எதிரியின் கம்பெனியில் வைத்து செந்தில்குமார் முன்னிலையில் ரூ.45,000 புகார்தாரருக்கு கொடுத்ததாக கூறியுள்ள விபரங்களுக்கு முரண்பட்டு எதிரி தனது சாட்சியத்தில், மதுரை சுந்தரம் பார்க்கில் வைத்து ரூ.40,000/- புகார்தாரருக்கு, செந்தில்குமார் மூலம் கொடுத்ததாக கூறியுள்ளார் என்று புகார்தாரர் தரப்பில் வாதிக்கப்பட்டது. மேற்படி எதிரியின் கம்பெனியும், சுந்தரம் பார்க்கும் ஒரே இடத்தில்தான் உள்ளது என்று எதிரி தரப்பில் முன்வைத்த வாதத்தை புகார்தாரர் தரப்பில் மறுக்கவில்லை.

10.17. மேலும் புகார்தாரருக்கு ரூ.45,000/- செலுத்தியதாக எ.சா.ஆ.3 ல் குறிப்பிட்டுள்ள விபரங்களுக்கு முரண்பட்டு ரூ.40,000/- கொடுத்ததாக எதிரி

AMALANATHA KAMALAKANNAN S
Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.08.31 18:31:57 +0530

கூறியிருந்தாலும், செந்தில்குமார் மூலம் எதிரி புகார்தாரருக்கு ரூ55,000/– செலுத்தப்பட்டதாக தெரிகின்ற நிலையில், காசோலை தொகையில் இருந்து மேற்படி தொகையை கழித்துக்கொண்டுதான் புகார்தாரர் வழக்கு தாக்கல் செய்திருக்க வேண்டும். ஆனால் மேற்படி தொகையை காசோலை தொகையிலிருந்து கழிக்காமல் புகார்தாரர் வழக்கு தாக்கல் செய்திருக்கும் நிலையில், எதிரியின் அனுமதியில்லாமல் புகார்தாரர் தாவா காசோலையை வசூலுக்கு தாக்கல் செய்துள்ளாரா என்று சந்தேகம் எழுகிறது.

10.18. இவ்வழக்கில், 08.06.2025 ம் தேதியன்று எதிரிக்கு புகார்தாரர் ரூ.1 லட்சம் கைமாற்றுக்கடன் கொடுத்தாரா என்று சந்தேகம் எழுந்துள்ள காரணத்தினாலும், 16.07.2025 ம் தேதியன்ற எதிரி மதுரை புதூர் காவல்நிலையத்தில் புகார்தாரர் மீது புகார்கொடுத்த விபரத்தை தெரிந்து கொண்டு புகார்தாரர் காசோலையை வசூலுக்கு தாக்கல் செய்துள்ள காரணத்தினாலும், செந்தில்குமார் எதற்காக புகார்தாரருக்கு தொகை செலுத்தினார் என்பதை புகார்தாரர் தரப்பில் நிரூபிக்காத காரணத்தினாலும், எதிரி வாங்கிய தொகையை செந்தில்குமார் மூலம் திருப்பி செலுத்தியுள்ளதாக சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் தெரிகின்ற காரணத்தினாலும், புகார்தாரருக்கு ஆதரவாக இருக்கும் மாற்றுமுறை ஆவண சட்ட பிரிவு 118(a) மற்றும் பிரிவு 139 கீழான சட்டப்படி அனுமானங்களை எதிரி தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் மறுக்கப்பட்டுள்ளது என்று முடிவு செய்கிறது.

10.19. புகார்தாரரின் வழக்கினை எதிரி தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் மறுக்கப்பட்டுள்ள நிலையில், 08.06.2025 ம் தேதியன்று எதிரி புகார்தாரரிடம் ரூ.1 லட்சம் வாங்கினார் என்றும், அதற்கு ஆதரவாக எதிரி தாவா காசோலையை கொடுத்தார் என்று நிரூபிக்கும் சுமையானது புகார்தாரருக்கே திரும்புகிறது. ஆனால் புகார்தாரரின் வழக்கை நிரூபிக்கும் வகையில் அவரது தரப்பில் காசோலையை தவிர்த்து வேறு

AMALANATHA KAMALAKANNAN S
Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.08.31 18:32:03 +0530

ஆவணங்களும் தாக்கல் செய்யவில்லை மற்றும் புகார்தாரரை தவிர்த்து வேறு நபர்களை அவரது தரப்பில் சாட்சியாக விசாரிக்கவில்லை.

10.20. இந்நிலையில், புகார்தாரர் காசோலையை தனது பொறுப்பில் வைத்திருப்பதால் மட்டுமே அவரது தரப்பு வழக்கானது நிரூபிக்கப்பட்டதாக தீர்மானிக்க முடியாது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. எனவே காசோலையில் கண்ட தொகையானது சட்டத்தினால் வலியுறுத்தக்கூடியது அல்ல என்றும், புகார்தாரர் நீதிமன்றத்திற்கு தூயகரங்களுடன் அணுகவில்லை என்பதால் எதிரிக்கு எதிரான மாற்றுமுறை ஆவணச் சட்டம் பிரிவு 138–ன் கீழ் குற்றச்சாட்டு சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

11. <u>முடிவு:</u>

எதிரி ஆஜர். முடிவாக, எதிரி மீது பிரிவு 138 மாற்றுமுறை ஆவண சட்டத்தின் கீழ் குற்றவாளி இல்லை என தீர்மானித்து பிரிவு 278(1) BNSS ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது.

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின் என்னால் சரிபார்க்கப்பட்டு 2026ம் வருடம் ஆகஸ்டு மாதம் 31–ம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

AMALANATHA KAMALAKANNAN S

Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.08.31 18:32:09 +0530

நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம், உத்தமபாளையம்.

1. <u>புகார்தாரர் தரப்பு சாட்சி:</u>

1	ம.சா.1	திரு.வளையாபதி (புகார்தாரர்)

2. புகார்தாரர் தரப்பு சான்றவணங்கள்:

1	ம.சா.ஆ.1	08.07.2025 நாளிட்டு எதிரி மனுதாரருக்கு கொடுத்த 000164 என்ற எண் கொண்ட ரூ.1,00,000/- த்திற்கான காசோலை அசல்.
2	ம.சா.ஆ.2	29.07.2025 நாளிட்டு திருப்பப்பட்ட காசோலையின் வங்கி குறிப்புரை அசல்.
3	ம.சா.ஆ.3	01.08.2025 அன்று மனுதாரர் எதிரிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல்.
4	ம.சா.ஆ.4	02.08.2025 ம் நாளிட்டு மேற்படி அறிவிப்பினை எதிரி பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக இணையதள பதிவிறக்க நகல்.
5	ம.சா.ஆ.5	16.08.2025 ம் நாளிட்டு எதிரி அனுப்பிய பதில் அறிவிப்பு.

3. புகார்தாரர் தரப்பு சான்றுபொருள்: இல்லை

4. எதிரி தரப்பு சாட்சிகள்:

1	எ.சா.1	திரு.செந்தில்குமார்
2	எ.சா.2	திருமதி.காயத்ரி (SBI, ACB வங்கி, மதுரை கிளை மேலாளர்)
3	எ.சா.3	திருமதி.சுகுணா

5. எதிரி தரப்பு சான்றாவணங்கள்:

1	எ.சா.ஆ.1	எதிரி புகார்தாரர் மீது கே.புதூர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததன் பேரில் புகார்தாரர் எழுதி கொடுத்த வாக்குமூலம்.
2	எ.சா.ஆ.2	செந்தில்குமார் என்பவரின் SBI வங்கி கணக்கு பட்டியல்.
3	எ.சா.ஆ.3	எதிரி புகார்தாரர் மீது கே.புதூர் காவல் நிலையத்தில் கொடுத்த புகார் மனு.
4	எ.சா.ஆ.4	எதிரி புகார்தாரர் மீது கே.புதூர் காவல் நிலையத்தில் கொடுத்த புகார் மனு இரசீது.

6. எதிரி தரப்பு சான்றுபொருள்: இல்லை

AMALANATHA KAMALAKANNAN S

Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.08.31 18:32:17 +0530

நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம், உத்தமபாளையம்.